★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 20 ஷவ்வா 25 இதழ் 173

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5—8—83

★ யாழ். அரசாங்க அதிபர் அறிக்கை:

## பதுக்கல் வர்த்தகர்மீது கடும் நடவடிக்கை!

### தகவல் தருவோருக்கு சன்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கும் வர்த்தகர்கள் மீது எடுக்கப்படவுள்ள கடுமையான நடவடிக்கைகளை யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அறிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் இத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிபரின் அறிக்கை வருமாறு;

யாழ். மாவட்டத்தில் பொதுவாக எல்லா அத்தியாவசியப் பொருட்களும் போதியளவு கையிருப்பிலிருந்தும் அவைகளில் சிலவற்றை ஒருசில வர்த்தகர்கள் பதுக்கியும், அதிக விலையில் விற்பதும் காணக்கூடியதாகவுள்ளது.

அத்தியாவசிய பாவனைப் பொருட்களைப் பதுக்குதல் 1979ம் ஆண்டின் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் 13ம் பிரிவின் கீழும், அவசரகாலப் பிரமாணங்களின் கீழும் தண்டிக்கப்படத்தக்க குற்றமாகும்.

அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளதென சந்தேகிக்கப்படும் எந்தவொரு கட்டிடமும் உடைக்கப்பட்டு அங்கு கண்டெடுக்கப்படும் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்.

எந்தவொரு அத்தியாவசி

(4-ம் பக்கம் பார்க்க)

# "பிரிவினையைக் கைவிட்டால் கூட்டணி செயல்படலாம்!

## பெயர்மாற்ற அவசியமில்லை!

### ராஜாங்க அமைச்சர் அல்விஸ் விளக்கம்

(இ. கந்தசாமி)

**"தமிழர் விடுதலைக் கூட்டணி தனது பெயரை மாற்றித்தான் இயங்க வேண்டுமென்ற அவசியமில்லை. அவர்கள் கொள்கையை மாற்ற வேண்டும். பிரிவினையைக் கைவிடவேண்டும். அதன் மூலம் அவர்கள் தொடர்ந்து செயல்படலாம்" என்று ராஜாங்க அமைச்சர் திரு: ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அமைச்சரவைக் கூட்டத்தின் பின் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்தார்.**

'பிரிவினைத் தடைச் சட்டத்தின் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி தடைசெய்யப்படுமா?' என்ற கேள்வியொன்றை நிருபர் கிளப்பினுர். அதற்கு அமைச்சர் இவ்விதம் பதில் சொன்னுர்.

கட்சியின் பெயருடன் ஒட்டியிருக்கும் 'விடுதலை' என்ற சொல் இருக்கலாமா என்று மற்றொரு நிருபர் கேட்டதற்கு, "அதனுல் ஒன்றுமில்லை. பிரிவினைக் கொள்கையைக் கைவிடவேண்டும்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

இந்தப் பிரிவினைத் தடைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் சகல எம். பி.க்களும் பிரிவினை கோரவில்லையெனச் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டும். இதேபோன்று மாநகரசபை, நகரசபை, மாவட்ட அபிவிருத்திச் சபை அங்கத்தவர்களும் செய்யவேண்டும். இவ்விதம் சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டும். சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறுபவர்கள் பதவி இழப்பார்கள்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

"வெளிநாடுகளிடம் உதவி கேட்டீர்களா?" என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, "பங்களாதேஷும், பிரிட்டனும் இதனை மறுத்துவிட்டன. இதில் எவ்வித உண்மையும் கிடையாது!" என்ருர்.

"பாரபட்சம் நாம் காட்டுவதில்லை. தமிழர் ஒருவரை ஐ.ஜி பி.யாக நியமித்துள்ளோம். இதிலிருந்து எவ்வித பாரபட்சமும் இல்லை என்பது தெரியவில்லையா?" என்றும் ஒருகேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சொன்னுர்.

## 'தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண இருந்தேன்!'

### மந்திரிசபைக் கூட்டத்தில் ஜே. ஆர்.

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அமைதிமான முறையில் அரசியல் ரீதியில் தீர்வு காணப்படவேண்டும் என்ற நோக்கத்துடனேயே தாம் எப்பொழுதும் செயல்பட்டு வந்ததாக, ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு, நேற்றுமுன்தினம் மந்திரிசபைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இத்தகவலை மந்திரி சபைக் கூட்டத்தைத் தொடர்ந்து நடந்த பத்திரிகை நிருபர் மகாநாட்டில், ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் தெரிவித்தார்.

திரு. அல்விஸ் மேலும் கூறியதாவது:- "அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனுதிபதி தமிழர் பிரச்னையைத் தீர்க்க இதுவரை காலம் எடுத்த நடவடிக்கைகளையும் இனிமேல் எடுக்க இருந்த நடவடிக்கைகளையும் கூறினுர்.

ஜனுதிபதி மேலும் தெரிவித்ததாவது:: "தமிழ் பேசும் மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் நிர்வாகப் பொறுப்புக்களைத் தமிழர்களிடம் ஒப்படைக்க அபிவிருத்தி சபைகளை அமைத்தேன். இது 1977 ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருந்தது.

"பல்கலைக்கழக அனுமதியில் நீண்டகாலமாக இருந்து வந்து பிரச்னையில் சுமுகமான முடிவு எடுக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

நல்லூர் உற்சவம் உள்வீதியில்

## இம்முறை கடைகள் அமைக்க அனுமதியில்லை!

### யாழ். மாநகர ஆணையாளர் தகவல்

(கல்வியங்காடு)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 13-ம் திகதி ஆரம்பமாகிறது. எனினும் நாட்டு நிலவரத்தைக் கருத்தில் கொண்டு உற்சவகால திருவிழாக்கள்யாவும் கோவில் உள்வீதியிலேயே நடைபெறும் என கோவில் எஜமானர் ஸ்ரீ குகதாஸ் மாப்பாண முதலியார் தெரிவித்தார்.

இவ்வாலய உற்சவகால ஒழுங்குகள் வழமைபோல நீண்டநாட்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டதாயினும், நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள நிலை காரணமாக கோவில் வீதியோரங்களில் வழமையாகப் போடப்படுகின்ற கடைகள் சந்தைகள் எதுவுமே இம்முறை நடாத்துவதற்கு அனுமதி இல்லை. தனியார்களும் கடைகளைப் போட அனுமதிமறுக்கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதனுல் கோவிலில்வழமையாகச்செய்து வரும் திருவிழாக்களை இம்முறை ஆலய உள்வீதியில் செய்ய கோவில் தர்மகர்த்தாவுடன்பேசி முடிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

மின்சார விளக்குகள் பொருத்தப்படமாட்டாது. சுகாதாரவசதிகள் சூழ்நிலைக்கேற்ப செய்யப்படலாம்' என்றும் அவர் கூறினுர்.

பக்தர்கள் நலன்கருதிதாக சாந்திநிலையங்கள் வீதியோரங்களில் சைவ அபிமானிகளால் அமைக்கப்படுவதும் தடுக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

அகதிகள் பேரில் நிதி சேகரிப்பு?

## போலிகளிடம்ஏமாருதீர் என்று யாழ். அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிற இடங்களிலிருந்துயாழ்ப்பாணம்வரும் அகதிகளுக்கு உதவுவதற்கென்று யாரும் நிதி சேகரிக்க வந்தால் அவர்களுக்குப் பணஉதவியோ பொருளுதவியோ அளிக்கவேண்டாமென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன்நேசையா பொதுமக்களுக்கு 'ஈழநாடு' மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எந்தவித அங்கீகாரமுமின்றி சிலர் அகதிகளின் பேரில் நிதி சேகரிப்பதாகத் தமக்குதகவல் தினம் கிடைத்திருப்பதாகவும் இவ்வித போலிகளிடம் ஏமாருதிருக்குமாறும் அரச அதிபர் பொதுமக்களை எச்சரித்துள்ளார்.

பிறஇடங்களிலிருந்து தற்போது அகதிகளாக வந்துகொண்டிருக்கும் தமிழ்மக்களை இறங்குதுறையில் வரவேற்று வேண்டிய மருத்துவ வசதி, உணவுவசதிகளை வழங்கிஅவர்களை அவரவர் இல்லங்களுக்கு அழைத்துச்செல்லும் பணியில் லங்கா சிமெந்து லிமிற்றெட் கூட்டுத்தாபனம் உதவிப் பொதுமுகாமையாளர் திரு. அந்தோனிப்பிள்ளை உட்பட ஜெயபாலசிங்கம்கம்பனி, காங்கேசன் ட்ரவல்ஸ், யாழ். லயன்ஸ்கழகம், யாழ். ரோட்டறிக்கழகம், செஞ்சிலுவைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி விவசாயிகளிடம் வெங்காயம் கொள்வனவு!

(யாழ்ப்பாணம்)

விற்பனைத் திணைக்களம் வழமைபோல் இவ்வாண்டும் வடபகுதி விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைக் கொள்வளவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

வெங்காயம் கொடுக்க விரும்பும் விவசாயிகள் விற்பனைத்திணைக்களத்துடன் தொடர்புகொள்ளலாம். அல்லது யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனவுச்சங்கத் தலைவர் திரு. சிவமகாராஜாவுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பட்டி மூடப்பட இருப்பதால் நல்லினப் (பால்இனம்) பசுக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். T. குணரத்தினம், 106, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு. 8110

Sani Fresh Powder பிளீச்சிங் பவுடர் (குளோறின் பவுடர்) நீரைச்சுத்தபடுத்தல், ஆடைகளைச் சுத்தமாக்குதல் கிணற்று பாசியை அகற்றி நீரைச் சுத்தப்படுத்தல், குளியலறை, மலசலகூடம், மாட்டுபட்டியை சுத்தப்படுத்தி துர்நாற்றத்தைப் போக்கல். விபரங்களுக்கு: S. மகாதேவன், ஜயந்தி என்றபிறைசஸ், சின்னத்துரை, விதானையார்வளவு, ஆவரங்கால். 8114

## காணவில்லை

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை செய்யும் திரு. சி. சபாபதி என்பவரை 22-7-83 தொடக்கம் காணவில்லை. இவர் வாய் பேசாதவர், கறுப்பு நிறம், 5 அடி உயரம், வலது தோள் புயத்தில் தீயினால் ஏற்பட்ட தளும்பு உண்டு. இவரைக் கண்டவர்கள் தயவுசெய்து சீமெந்துத் தொழிற்சாலையில் அல்லது கோண்டாவில் டிப்போ பொறியியல் பகுதி சி. சுந்தரம் என்பவருக்கு தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும், 8117


# "நாட்டில் தோன்றிய வன்முறைகளுக்கு பிரிவினைக் கோரிக்கையே காரணம்"

## அமைச்சர் முகமத் விளக்கம்

(கொழும்பு)

''அண்மையில் நாட்டில் தோன்றியிருந்த வன்முறைகளுக்குப் பிரிவினைக் கோரிக்கையே காரணமாகும்'' என்று போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச். எம். முகமத் நேற்று வழங்கிய வானொலி, தொலைக்காட்சிகளுக்கான பேட்டியில் குறிப்பிட்டார்.

அமைச்சர் முகமத் மேலும் கூறியதாவது:-

'இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் துயரநிலையில் இருப்பதற்கும், குறிப்பாக ஏழைகள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கியிருப்பதற்கும் பிரிவினைவாதமே காரணமாகும். பிரிவினைக் கோரிக்கையால் எழுந்த கருத்துவேறுபாடுகளே இன்று வன்முறைகளாக வெடித்துள்ளது.

இந்த நாட்டை பிளவுபடுத்த இங்குள்ள முஸ்லீம் சமூகத்தவர்கள் ஒருபோதும் முன்வரமாட்டார்கள். இதனை அவர்கள் உறுதியாகத் தெரிவிக்கிறார்கள். நாட்டைப் பிளவுபடுத்துவதால் எவருக்கும் எதுவித லாபமும் கிடைக்கப்போவதில்லை. மாறாகப் பெருந் துயரங்களும் கஷ்டங்களுமே தலையெடுக்கும்.

பிரிவினைக்கோரிக்கை எழுந்ததற்கு சிங்கள, தமிழ் இனங்களிடையே நம்பிக்கையின்மை காணப்பட்டதே பிரதான காரணமாகும். இந்த இரு இனங்களும் ஒன்றையொன்று நன்கு அறிந்தும், பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையிலும் இருந்திருந்தால் பிரிவினையென்பதற்கே இடமில்லாதுபோயிருக்கும்.

சிங்கள மக்கள் ஒருபோதும் சாதி, மத பேதங்களைக் கொண்டவர்களல்லர். இதற்கு எனது பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் ஒரு நல்ல உதாரணமாகும். ஏனெனில் எனது தொகுதியில் தொண்ணூறு சத வீதமானவர்கள் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர்களே. அவர்கள் முஸ்லிம் இனத்தவனான என்மீது கொண்ட நம்பிக்கையாலும், தமது சாதி, மத பேதங்களைக் காட்டாததன்மையினாலுமே என்னைத் தமது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்தனர்.

சிங்கள மன்னர்கள் காலந்தொட்டே முஸ்லிம்கள் சிங்கள மக்களுடன் நல்லுறவைப் பேணிவருகின்றனர். அவர்களது இன்ப, துன்பங்களில் பங்கெடுக்கின்றனர். அவர்களும் எமது விவகாரங்களில் அக்கறையுடன் பங்கெடுக்கின்றனர்.

முஸ்லிம்கள் சிங்கள இனத்தவர்களுடன் கொண்டுள்ள உறவுகளைப்போன்றே தமிழ்ச் சகோதரர்களுடன் உறவுகளைக் கொண்டுள்ளனர். பலகாலமாக அவர்களுடனும் நெருங்கி வாழ்கின்றனர். ஆகையினால் ஒருபோதும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் பிரிவினையை ஆதரிக்கமாட்டார்கள்'' என்றார்.

அமைச்சர் முகமத் வன்செயலினால் பாதிக்கப்பட்டோருக்கு அரசாங்கம் தகுந்த நிவாரணம் வழங்குமென்று தெரிவித்ததுடன், வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு மீண்டும் அவற்றை வழங்கும்வகையில் நியாயமான முடிவுகளை அரசு எடுக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (கி)

# அரசியலமைப்புக்கு ஆறுவது திருத்தச்சட்டம் முரணானதல்ல

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

### இரு ஏற்பாடுகள் மட்டும் ஏற்கப்படவில்லை

(கொழும்பு)

''அரசியல் அமைப்பிற்கு ஆறுவது திருத்தச் சட்டம் எவ்விதத்திலும் முரணானதல்ல'' என்று உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் தலைமையில் எட்டு நீதியர்சர்கள் நேற்று இந்த ஆறுவது திருத்தச் சட்டத்தைப் பரிசீலனைசெய்தனர். சொலிஸிட்டர் ஜெனரல் திரு. குலதுங்க இத்திருத்தச் சட்டத்தை உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர், இந்த நாட்டில் பிரிவினை கோரும் கட்சிகளையும், இயக்கங்களையும் தடைசெய்யும் வகையிலேயே இச்சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளதென்று நீதிமன்றிடம் விளக்கமளித்தார்.

சொலிஸிஸ்டர் ஜெனரலின் சமர்ப்பணத்தை ஏற்றுக் கொண்ட பிரதம நீதியரசர் தாம் நீதிமன்றின் தீர்ப்பை சபாநாயகரிடம் அறிவிப்பதாகக் கூறினார்.

பின்னர் மாலையில் பிரதம நீதியரசர் தலைமையிலானஉயர் நீதிமன்றம் தனது தீர்ப்பை அறிவித்தது. அத்தீர்ப்பில், 'ஆறுவது திருத்தச் சட்டம் அரசியலமைப்பில் கொண்டு வரப்படுவது எவ்வகையிலும் அரசியலமைப்புக்கு முரணானதல்ல' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், அத்திருத்தச் சட்டத்திலுள்ள அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் என்ற இரு ஏற்பாடுகளை மட்டும் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தீர்ப்பையடுத்து நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாத மேற்குறிப்பிட்ட இரு ஏற்பாடுகள் குறித்து மீள் பரிசீலனைசெய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (கி)

# 'சாட்' ஜனதிபதி கொலை!

லண்டன், ஆக. 4

மத்திய ஆபிரிக்க நாடான 'சாட்' ஜனதிபதி ஹாப்ரே கிளர்ச்சிக்காரர்களால் கொல்லப்பட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

'சாட்'டில் கடந்த சில மாதங்களாக முன்னாள் அரசியல் பிரமுகர் ஒருவரின் தலைமையிலான கிளர்ச்சிப் படைகள் அரசைக் கைப்பற்றப் போராடி வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனதிபதி ஹாப்ரேயைக் கொன்றவர்கள்' அவரது தொழில்துறை அமைச்சரைக் கைதுசெய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# லோகசபையிலிருந்து தி.மு.க. வினர் வெளிநடப்பு!

## நரசிம்மராவ் அறிக்கைக்கு ஆட்சேபம்

புதுடில்லி ஆக 4

இந்தியலோகசபையிலிருந்து திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் இலங்கை விவகாரம் தொடர்பாக இச்சபையில் சமர்ப்பித்த அறிக்கை மீது அதிருப்தி கொண்டே அவர்கள் இவ்வாறு வெளியேறினர்.

வெளிநடப்புச் செய்த தி. மு. க. உறுப்பினர்கள் இலங்கை விவகாரம் தொடர்பாக புதிய அம்சங்கள் எதனையும் அமைச்சர் நரசிம்மராவ் தமது அறிக்கையில் சேர்க்கவில்லை என்று தெரிவித்தனர்,

இந்த உறுப்பினர்கள் இலங்கைக்கு இந்தியாவிலிருந்து எரிபொருளான மண்ணெண்ணை ஏற்றுமதி செய்யப்படுவதற்கும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் லோகசபையில் இலங்கை விவகாரம் தொடர்பாக சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கை, இந்தியா ஆகியன இருவேறு நாடுகளான போதிலும் இலங்கையில் இடம்பெறும் பெரும் இன்னல்கள் குறித்து இந்தியா அமைதியாக இருக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

இலங்கை ஜனதிபதி, அமைச்சர்களுடனான தமதுபேச்சுக்கள் பற்றி அவர்கருத்து வெளியிடுகையில், பிரிவினைக்கோரிக்கையைமுற்றாக ஒழித்துக்கட்ட இலங்கை ஜனதிபதி முடிவு செய்துள்ளதாகவும், அரசைக் கவிழ்க்க முயற்சி செய்தஎதிர்க் கட்சிகளின் நடவடிக்கையே அங்கு நடைபெற்ற வன்முறைகள் என்று தம்மிடம் கூறப்பட்டதாகவும் திரு. நரசிம்மராவ் கூறினார். [கி]

# தென்சீனாவில் வெள்ளப்பெருக்கு 100 பேர் பலி

பீக்கிங், ஆகஸ்ட் 4

தென்சீனாவில் ஏற்பட்ட இடியுடன்கூடியபெரும்மழையினால் உண்டான வெள்ளப்பெருக்கினால் 100 பேர் இறந்துவிட்டார்கள். 400பேர் காயமடைந்துள்ளார்கள். இத்தகவலை சீன செய்தித்தாபனம் அறிவித்துள்ளது. (சூ)

# சிவானந்த குருகுலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கடைச்சாமி வீதியிலுள்ள சிவானந்த குருகுல சமஸ்கிருத பாடசாலையில் போக்குவரத்து வசதிகள் காரணமாக வகுப்புக்கள் நடைபெறுவது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக குருகுலம் தெரிவித்துள்ளது.

# விமானப் பயணிகளுக்கு விசேட வசதிகள்!

[கொழும்பு]

கட்டுநாயக்கா விமானநிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகள் நலனை முன்னிட்டு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்ட வேளைகளில் இரவு நேர விமானப் பயணத்துக்கு செல்லவிருப்போர் ஹோட்டல் இன்டர் கொன்டினன்டல் அல்லது ஹோட்டல் லங்கா ஒபரோய்க்கு இரவு 8-15க்கு முன்னர் வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தஹோட்டல்களிலிருந்து விமானப்பயணிகள் விசேட பஸ் வண்டிகளில் விமானநிலையத்துக்கு கொண்டுசெல்லப்படுவர்.

பெரும்பாலான விமான சேவைகள் மீண்டும் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளனவென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

# பாற்சபை ஊழியர்கள் வேலைக்கு அழைப்பு

(கொழும்பு)

தேசிய பாற்சபையைச் சேர்ந்த சகல ஊழியர்களும் வேலைக்கு வரும்படி அழைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் வேலைகள் வழமையான நேரத்தில் மாத்திரமன்றி ஊரடங்குச் சட்ட நேரத்திலும் தொடர்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

# புனர்வாழ்வு நடவடிக்கை: அரசு துரிதமாக்கும்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்களிலும், கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே உள்ள அகதிகள் முகாம்களிலும் இருப்போரின் எண்ணிக்கை சுமார் எழுபத்தொன்பதாயிரம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் தொடர்ந்துமிருக்க விரும்பியிருக்கும் 70 சதவீதமான அகதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொள்ளும் என்று ராஜாங்க அமைச்சின் செயலாளர் டக்ளஸ் லியனகே தெரிவித்தார். பாதிக்கப்பட்டவர்களின் நிவாரணத்துக்கென நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும், இந்த நிதியத்துக்கு வெளிநாடுகளிலிருந்தும் நன்கொடைகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (கி)

# தென்னம்பிள்ளைகளை தந்துதவுமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக 2000 தென்னம்பிள்ளைகளை கிளிநொச்சி விவசாயநாற்றுமேடையிலிருந்து தந்துதவுமாறு கிளிநொச்சி தென்னைப் பயிர்ச்செய்கைப் பிராந்திய பொது முகாமையாளரை தொல்புரம் சமநலச்சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் திரு பி. சூசைப்பிள்ளை கடிதமூலம்கேட்டுள்ளார்.


விசா இல்லாமல்

சிங்கப்பூர், லண்டன், கனடா, மலேசியா, கொங்கொங், சம்பியா அல்லது பாகாமா ஆகிய நாடுகளுக்கு செல்ல

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வங்கியின் கட்டணத்தில்

- விமான ஆசன பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைக்கும் இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்டட்

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ZAMBIAN AIRWAYS பிரதான விற்பனைப் பிரதிநிதி)

General Sales Agents

த. பெ. எண்: 92 போன்: 24154

## பேக்கரிகளுக்கு மா வழங்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு நகரிலுள்ள பேக்கரிகள் தினமும் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை கொழும்பு யூனியன் பிளேசிலுள்ள உணவுத் திணைக்களம், ஆணையாளர் திணைக்களத்திலுமிருந்துநேரடியாக பெற்றுக் கொள்ளலாம். பேக்கரிச் சொந்தக்காரர்கள், ஊரடங்கு சட்ட பெர்மிட்டுகளை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும். (க)

# 64,000 அகதிகளில் 30 வீதமானோர் தமிழ்ப்பகுதி செல்ல விருப்பம்!

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்றுள்ள 16 அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் 64,000 பேரில் 30 வீதமானவர்கள் தமிழ்ப்பகுதிகளுக்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனராம்.

இவர்களில் 2500 பேர் ஏற்கனவே கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். சிலர் தமதுசொந்தச்செலவில் விமானமூலமும் சென்றுள்ளனர்.

ரயில் மூலமும் அகதிகளை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகவலை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. பிரட்மன்வீரக்கோன் நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அகதிகள் தாமாகவே தரை மார்க்கமாகச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்தால் தாம் அதற்குப் பாதுசாப்பு அளிக்கத்தயாராயிருப்பதாயும் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். (இ-அ)

எம். பி. க்களின் சிபார்சில்

## ஊர்காவல்படை நியமனம்; பொலிஸ்நிலையத்தில் கடமை

(கொழும்பு)

நாட்டில் பொலிஸாருக்கு உதவியாக ஊர்காவல்படை அமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. லூயிஸ் பெர்ணண்டோ இவற்றை அமைத்துள்ளார். ஒவ்வொரு ஊர்காவல் படையிலும் 25 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுக்கு அமைய நியமிக்கப்பட்டுள்ள இவர்கள் அவ்வப் பொலிஸ் நிலையத்திலிருந்து செயல்படுவார்கள்.

ஐ. தே. க, தலைவர் திரு. பண்டிதரத்ன விடுத்துள்ள வேண்டுகோளில், மாதர் சங்கங்கள், இளைஞர்சங்கங்கள், கட்சிக் கிளைகளின் பூரண ஒத்துழைப்பை பெற்று சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுமாறு சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுள்ளார். (க)

## சமயத் தலைவர்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்ட நிலைமையைத்தொடர்ந்து சமயத் தலைவர்கள் அறிக்கைகள் விடுத்துள்ளனர். மல்வத்தை, அஸ்கிரியபீட மகாநாயக்க தேரோக்கள் விடுத்த செய்தியில் இந்நாட்டு மக்கள் சுதந்திரத்துக்காக ஒன்றுகப் போராடி இன்று எம்முன் சண்டைபிடிப்பது வேதனைக்குரிய விடயம். குரோதங்களை மறந்து ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றனர்.

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி.வந். நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணண்டோ விடுத்த செய்தியில் 'கிறிஸ்துவின் வழியில் அன்பு, சமாதானம், நீதி இவற்றை மனதில்கொண்டு நாம் வன்செயல்களைவிடவேண்டும் அமைதி, ஒற்றுமை இந்நாட்டில் நிலவவேண்டும் என்றூர்.

மெதடிஸ்த திருச்சபையின் வண. ஞானப்பிரகாசம், அங்கிலிக்கன் சபை மேற்றிராணியார் அதி. வண. சுவிதின் பெர்ணண்டோ ஆகியோரும் செய்திகள் வெளியிட்டனர்.

வன்முறைகள்:

# உயிரிழந்தோர் தொகை - 267!

## ராஜாங்க அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த மாதம் 25-ம் திகதியிலிருந்து 31-ம் திகதிவரை இடம்பெற்ற வன்முறைகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 267 ஆகும். ராஜாங்க அமைச்சின் செயலாளர் பொலிஸ் பகுதியினரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இதனை வெளியிட்டார்.

1488 தீவைப்புச் சம்பவங்களும், 76 கொள்ளைச் சம்பவங்களும், ஏனைய 300 விஷமச் செயல்களும் வன்முறைக் காலங்களில் நடைபெற்றுள்ளமை பதியப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பி வருவதாகவும், போக்குவரத்து மக்கள் நடமாட்டம் என்பன அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொள்ளையடிக்கப்பட்ட பொருட்சளில் பல மீட்கப்பட்டுள்ளனவென்றும், வன்முறைகளில் ஈடுபட்ட 400 பேர் கைதாகியுள்ளனரென்றும் ராஜாங்க அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார், சந்தேகத்துக்குரிய பகுதிகளுக்குச் சென்று வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளை அவை உரிய முறையில் வாங்கப்பட்டவையா அல்லது கொள்ளையிடப்பட்டவையா எனச் சோதித்து வருகின்றனர். (கி)

## அத்தியாவசிய சேவைகளுக்கான பிரதி ஆணையாளர்கள் நியமனம்

(கொழும்பு)

அத்தியாவசிய தேவைகளை உறுதிப்படுத்துவதற்காக நாடெங்கிலும் 8 பிரதி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அத்தியாவசியசேவைகளுக்குப் பொறுப்பான ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோன் இவர்களுக்கான நியமனங்களை வழங்கியுள்ளார்.

இவர்கள் அகில இலங்கை ரீதியிலும் செயற்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்விபரம் வருமாறு: 1. போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மகிந்த இளைய பெருமா, 2. உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், 3. கட்டடப் பொருள் கூ. தா. தலைவர் அஜந்த விஜயசேன, 4. விவசாய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரஞ்சன் விஜயரத்ன, 5. திட்டஅமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய, 6. கடற்றெழில் அமைச்சின் செயலாளர் அநுரா வீரரத்தன, 7. இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் சரத் ரத்வத்தை, 8. சிறில்கமகே.

இவர்களைத் தவிர மாவட்டங்களின் இணைப்பு அதிகாரிகள் அந்தந்த மாவட்ட பிரதி ஆணையாளர்களாக செயற்படுவார்கள், எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சூ)

## கொழும்பில் புதிய அரிசி நிலையம்

(கொழும்பு)

கொழும்பில் புதியஅரிசி விற்பனை நிலையமொன்று இன்று திறக்கப்படவுள்ளது. இந்நிலையத்தில் அங்கத்தவர்களாக சேரவிரும்புபவர்கள் வர்த்தக கப்பல்த்துறை அமைச்சுடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையத்துக்கு விநியோகிப்பாளர் அரிசியை போதியளவுவழங்கலாம். அதேவேளை சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் இந்நிலையத்திலிருந்து அரிசியைப் பெற்றுச் செல்லலாம். இவர்கள் அரிசியைக் கொண்டுசெல்வதற்கு போதிய பாதுகாப்பும் வழங்கப்படவுள்ளது. (சூ)

## அகதிகள் பயணத்திற்கு ஜெட், அவ்ரோ விமானங்கள்!

(கொழும்பு)

கொழும்பிலும் அதனை அண்டியுள்ள பிற இடங்களிலுமுள்ள அகதிகள் முகாம்களிலுள்ளவர்களை அவர்களது சொந்த இடங்களுக்குக் கொண்டு சேர்க்கும்பணி துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பணியை மேலும் துரிதப்படுத்த இலங்கை விமானச் சேவையின் முப்பது முதல் நாற்பதுஇருக்கைகள் கொண்ட டி.ஸி. -3ரகஜெட்விமானங்கள் அவ்ரோ விமானங்கள் ஆகியவற்றுடன் விமானப்படை விமானங்களும் சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளன.

அகதிகள் முகாம்களிலுள்ள மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் விமானமார்க்கமாக மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர். இதுவரை கொழும்பு முகாம்களிலிருந்து சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு அகதிகள் கப்பல் மார்க்கமாக காங்கேசன்துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளனர்.

மேலும் சில கப்பல்கள் அகதிகளுடன் வடக்கே புறப்பட்டுள்ளன. வேறு சில அகதிகளை ஏற்றிக்கொண்டிருக்கின்றன. வசதிபடைத்த சிலர் ஒன்று சேர்ந்து தனியார் விமானங்களை வாடகைக்கமர்த்திச்செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## நாடெங்கிலும் நிலைமை வழமைக்குத் திரும்புகிறது!

(கொழும்பு)

நாடெங்கிலும் குறிப்பாக கொழும்பில்இப்போதுநிலைமை சீரடைந்துள்ளது. தகாத சம்பவங்கள் மிகக் குறைவாகவே இடம் பெறுகின்றன.

இவ்வாறு ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 1 கொலைச் சம்பவம், 11 தீவைப்பு, 3 கொள்ளை இடம் பெற்றது. ஆனல் திங்கட்கிழமை கொலை ஏதும் நடைபெறவில்லை. 7 சிறிய அசம்பாவிதங்களே இடம் பெற்றன.

தடைசெய்யப்பட்ட மூன்று கட்சிகளையும் சேர்ந்த 31 பேர் தேடப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 19 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் மிகுதிப் பேரை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவாகளுக்கு புகலிடமளிப்பவர்கள், அல்லது மறைத்து வைத்திருப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இவர்கள் இருக்கும் இடங்களை அறிந்தவர்கள் உடனடியாக அந்தந்த கிராம சேவகர்கள் மூலமாக அறிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (சூ)

## தடையான கட்சி உறுப்பினர் கைது

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட அரசியல் கட்சியொன்றைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

வரக்காபொலவில் அவர் கைதானர். கலு ஆராச்சிகே சோமரத்ன என்பது அவரின் பெயராகும். இவர் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர் என்ற விபரம் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை ஏனைய தடைசெய்யப்பட்ட கட்சியினரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. (கி)

வெலிங்டன் (யாழ். நகர்)
பிரதாப் - சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
விஜயன் - சத்தியகலா
த னி ம ர ம்

ராணி (யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
காலை 10-30 மணிகாட்சி மட்டும்
விஜயகுமார் - ஜெய்கணேஷ் - லதா - நாகேஷ்-சுபாஷினி
நடித்த
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தபுதிய வண்ணப் பிரதி)

REGAL ரீகல்
10-00 a. m. only. Show ends at 12-30
'GIRL FROM INDIA"
காலை 10-00 மணிக்காட்சி மட்டும்
இக்காட்சி 12-30 க்கு முடிவடையும்

ஹரன் (யாழ். நகர்)
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் துணை
(கலர்)

ராஜா (யாழ்நகர்)
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

## மணிவாக்கு

தூய அறிவு வடிவாக விளங்கும் இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாமல் இருப்பாரானால் அவர் கற்ற கல்வியினால் ஆகிய பயன் என்ன?

—திருவள்ளுவர்

# உன்னையே நீ எண்ணிப்பார்!

"உன்னையே நீ எண்ணிப்பார்" என்பது தமிழ் சித்தர் ஒருவரின் வாக்கியம்.

"உன்னையே நீ அறிவாய்" என்பது சோக்ரட்டீஸ் வாய்மொழி.

தன்னைத்தான் அறிந்து கொண்டவன் உலக இயல்புகளைப்பற்றி அலட்டிக் கொள்வதுமில்லை. அவசர உலகின் நெருக்கடிகளில் சிக்கித் தவிப்பதுமில்லை.

ஏதோ ஒரு நியதியின்படி உலகமும் உலக இயக்கமும் நடைபெறுகின்றன என்ற மனோபாவத்தில் அவன் அமைதி காக்கின்றான்.

இந்த நிலையில் தான், "என்னைத் தோண்டி ஞானம் கண்டேன்......" என்று பாடினான் நவகால கவிஞன் ஒருவன்.

கல்வி கேள்விகளில் தான் பெற்ற அறிவினால் மற்றவனைவிட தான் உயர்ந்தவன் என்று ஒருவன் நினைத்துக்கொள்கின்றான்— இன்னொருவன் தான் பெற்ற செல்வத்தினால் தானே பெரியவன் என்று செருக்கடைகின்றான்— மற்றுமொருவனோ தான் பெற்றுள்ள பதவியினாலும், அதிகாரத்தினாலும் தன்னை உயர்ந்தவன் என்று கருதி செருக்கடைகின்றான்— மேலும் ஒருவன் அரசியல் செல்வாக்கினால் தன்னை மறந்துவிடுகின்றான்.

இளமை, அழகு, கல்வி, அறிவு, பணம், செல்வம், பதவி, அதிகாரம், செல்வாக்கு என்று ஏதாகிலும் ஒருவகையில் மற்றவனைவிட தான் உயர்ந்தவன் என்று காட்டிக் கொள்வதற்கு இவர்கள் விரும்புகிறார்கள்.

இவ்வாறு செருக்கடைபவர்கள் அந்தச் செருக்கின் காரணமாகச் செய்யும் காரியங்களில் பெரும்பாலும் வெற்றியடைவதில்லை, வெற்றிபோல் தோன்றினாலும் அதுமேலும் செருக்கை அதிகரித்து பெருவீழ்ச்சிக்கே வழிகோலுகின்றது.

உலக நடப்புக்களை உன்னிப்பாக அவதானித்துவருபவர்கள்-இந்த உண்மையைப் புரிந்து கொள்வது கடினமல்ல. ஏன் 'தான்' என்ற மமதைகளான எந்த ஒரு மனிதனும் தன் வாழ்வின் கடந்த காலத்தைச் சற்றுத் திரும்பிப்பார்த்தாலும் போதும் இது தெட்டெனத் தெரியும்.

விஞ்ஞானத்தின் அற்புத முன்னேற்றம் மனிதனை இந்த நிலைக்குக் கொண்டு வந்துசேர்த்துள்ளது. தன்னைவிட தன் ஆற்றல்களைவிட வேறொரு சக்தி செயல்படுகின்றது என்பதை இவன் மறந்து போனான் - அதனால் கடவுள் என்ற நம்பிக்கையையே அவன் தூக்கி எறிந்துவிட்டான். கோயில், குளம், கலை, கலாச்சாரம் என்பதெல்லாம் வெறும் வேடிக்கையாகவும், பொழுது போக்காகவும் மாறிவிட்டன.

எங்கும், எதிலும், 'நான்' என்ற முனைப்பு மனிதனை ஆட்கொண்டு விட்டது.

"நான் தரன்" "நான் நினைத்தால்" "நானாய் இருந்தால்" என்று 'நான்' தலையின் மேல் ஏறிக்குந்திக் கொண்டுவிட்டது.

தன்னைத்தான் உணர்பவனுக்கு இதுவிசித்திரமாகும். தனக்கிருக்கும் 'சக்தி' அல்லது 'திறமை' அல்லது 'பண்பு' ஏதோஒருகாரணத்துக்காக இறைவனால் அருளப்பெற்றது என்று அவன் கருதுவான். அந்தப்பண்பினை உலகச் சேமத்துக்காக தன்னைவிட வலிமைகுறைந்தவர்களுக்காக, பயன்படுத்துவான். அதனை அவன் பாழடிப்பதில்லை. அவ்வாறு செய்தவர்களே உலகின் கண் மகான்களாகவும், பெரியோர்களாகவும் என்றும் போற்றப்படுகின்றனர்.

"அர்ச்சுனா, என்னவோ உன் உற்றாரையும், உறவினர்களையும், குருமார்களையும் கொன்றொழிக்கப்போவது போல் கவலைப்படுகிறாயே' நீசெய்யாவிட்டாலும் அவர்கள் அழியத்தான் போகிறார்கள். உன்கடமை போர்செய்வது. உன்னை வெறும் கருவியாகவே நான் பயன்படுத்துகிறேன்எனவே தளர்ச்சியை விடுத்து வில்லை கையில்எடு" என்று பகவான் பார்த்தனுக்கு இதைத்தான் உபதேசித்தார்.

நாம் எல்லாருமே இறைவனின் கருவிகள் தாம். அவன் எமக்கு அளிந்துள்ள திறமைகளையும், சத்திகளையும் அவன் பிரீதியுறும்வகையில் பயன்படுத்துவோம். அதுஉலக சேமத்துக்கு உதவட்டும்.

நமக்கு விதிக்கப்பட்டுள்ள கடமையை செவ்வனே செய்வோம். அது பருவம் வரும்போது பயனளிக்கவே செய்யும்.

இதைக்கருத்தில் கொண்டே பாரதிபாடினான்:-

'திருவைப்பணிந்து
நித்தம்
செம்மைத்தொழில்
புரிந்து
வருகவருவதென்றே-
கிளியே
மகிழ்வுற்றிருப் மோமடீ"
என்று,

'உலகன்'

## நல்லூர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. நாட்டு நிலைமைகளின் கணிப்பைக் கொண்டு உற்சவகாலங்களுக்கு முன்பாக தாம் ஒரு அறிக்கையை விட உள்ளதாகவும் யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (வெ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம் 5-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telegram: 22389—24126.

## பயிர்ச்செய்கை உத்தியோகஸ்தர்கள்

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் கமநலசேவைப் பகுதியில் இதுவரைகாலமும் வெற்றிடங்களாக இருந்துவந்த பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பதவிகளுக்குப் புதிய நியமனங்கள் விவசாய அபிவிருத்தி அமைச்சினால் செய்யப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் சங்கானை கிழக்குப்பிரிவுக்கு திரு. க. ஸ்ரீகரனும், வட்டுக்கோட்டை மேற்குப் பிரிவுக்கு திரு. மா. கனகசபாபதியும், தொல்புரத்திற்கு திரு. ஆர். சிறிரஞ்சனும், காரைநகர் மேற்குப் பிரிவுக்கு திரு. ரி. சிறிஸ்கந்தராஜாவும் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றுள்ளார்கள். (அ)

## பதுக்கல் வர்த்தகர் மீது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப் பொருளினதும் சுற்றுறையில், கொள்கலனில் அல்லது அட்டையில் குறிக்கப்பட்டு இருக்கும் அதன் விலைக்குமேல் விற்பனை செய்தல் பாவனையாளர் பாதுகாப்புச்சட்டத்தின் 7-ம் பிரிவின் கீழ் ஓர் குற்றமாகும்.

கோதுமைமா, பாண், மைசூர் பருப்பு ஆகியவை விலைக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருள்களாம். இவை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரமான விலைகளுக்கு மேல் விற்கப்படலாகாது.

விலை குறிப்பிடப்படாத எந்தவொரு அத்தியாவசியப் பொருளும் நியாயமற்ற விலைகளில் கடைகளில் அல்லது சந்தைகளில் விற்கப்படுதல் கண்டுபிடிக்கப்பட்டால் அவை உடனடியாக சுவீகரிக்கப்பட்டு கூட்டுறவுகடைகள் அல்லது வேறு அரசாங்க ஸ்தாபனங்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

குற்றம் புரியும் வர்த்தகர்களின் அனுமதிப் பத்திரங்களும் இரத்துச்செய்யப்படும்.

பதுக்கல், கொள்ளைலாபம் பெறுதல் போன்ற சமூக விரோத நடவடிக்கைகள் சம்பந்தமான தகவல்களை உடனடியாக அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தகவல் கொடுப்பவர்களின் பெயர், அத்தாட்சி போன்றவை மிகவும் இரகசியமாக வைக்கப்படும். கீழ்க்காணும் தொலைபேசிகளின் மூலமும், பகுதி உதவி அரசாங்க அதிபர் மூலமாகவும் தகவல்கள் கொடுக்கப்படலாம்.

22235 — அரசாங்க அதிபர்.

23301 — மேலதிக அரசாங்க அதிபர்.

24156 — உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர்.

22429 — உதவி உணவுக்கட்டுப் பாட்டாளர்.

22233 — கச்சேரி.

22149 — விற்பனைத் திணைக்களப் பிரதி ஆணையாளர்.

22020 — கூட்டுறவு அபிவிருத்தி சிரேஷ்ட உதவி ஆணையாளர்.

2 048 — கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

242 — (கிளிநொச்சி) கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பரந்தன்)

பொது மக்கள் எவரேனும் கொடுக்கும் தகவல்களைக் கொண்டு பதுக்கல் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் சன்மானம் வழங்கப்படும்.

## போலிகளிடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம், கத்தோலிக்க குருபீடம், வை. எம். சி. ஏ, யாழ். வைத்திய அதிகாரிகள் சங்கம், முதலான நிறுவனங்கள் ஈடுபட்டுவருவதாகவும் மற்றும் தேவைகளை கவனிப்பதற்கென்று நிதிவசூலிப்பதற்கு எந்தஸ்தாபனமும் நியமிக்கப்படவில்லையென்றும், எனவே அகதிகள்நிதிக்கென்று நிதியோ பொருளோ யாரிடமும் வழங்க வேண்டாமென்றும் அரச அதிபர்திரு. தேவநேசன் நேசையா பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அப்படி நன்கொடைவழங்க விரும்பும் பொதுமக்களை உடனடியாகத் தம்முடன்தொடர்புகொள்ளுமாறு யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## தமிழர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

"அரசியலமைப்பில் தமிழுக்குத் தேசிய அந்தஸ்து வழங்கப்பட்டது."

"தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிப்பதற்காகவே பல ஆலோசனைகளை நடத்துவதற்கு திட்ட மிட்டிருந்தேன்.

"இதற்காக சர்வகட்சிகளை கொண்ட மகாநாட்டை கூட்ட ஏற்பாடு செய்தேன். பிரிவினை கோரும் இயக்கங்கள் இந்தக் கோரிக்கையை கைவிடும் பட்சத்தில் தமிழ்மக்களின் ஏனைய கோரிக்கைகள் யாவற்றையும் செவிசாய்க்க நான் ஆயத்தமாக விருந்தேன்.

"பயங்கரவாத தடைச்சட்டத்தை வாபஸ் பெறுதல் வட பகுதியிலிருந்து ஆயுதப் படையை வாபஸ் பெறுதல்; பயங்கரவாதிகளுக்கு பொது மன்னிப்பு அளித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க நான் முன்வந்தேன்.

"பயங்கரவாதிகள் ஆயுதங்களை கைவிட்டு பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வர வேண்டும் என்று தான் கோரவிடுந்தேன்.

"பிரிவினைவாத இயக்கத்தினர். அழைப்பை ஏற்று சர்வகட்சி மாநாட்டிற்கு வந்தால் இந்த யோசனைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கலாம் என எண்ணியிருந்தேன். இதற்கு அவர்கள் இணங்காது போனால் பிரிவினை கோரும் இயக்கத்தை முற்றாகவே தடைசெய்யப் போவதாக அறிவிக்கலாம் எனத் திட்டமிட்டிருந்தேன்.

"இப்படியெல்லாம் செய்வதற்கிடையில் யாழ்ப்பாணத்தில் 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். இதனை தொடர்ந்து நாட்டில் கலவரங்கள் தலைதூக்கின. இந்த நிலையில் நாட்டில் அமைதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டியிருந்தது.' என்றார்.

பிரிவினை கோருவதைச் சட்ட விரோதமாக்குவதைத் தவிர வேறு எந்த வழியும் ஜனதிபதிக்கு இருக்கவில்லை" என்று ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ், பத்திரிகை நிருபர் மகாநாட்டில் தெரிவித்தார். (இ-க)

## மரண அறிவித்தல்

### கு. கனகரத்தினம்

"சத்தியபதி" தெல்லிப்பளை குழந்தைவேலு கனகரத்தினம் காலமானார். (படவரைஞர், கொழும்பு கட்டிடத் திணைக்களம்) இவர் காலம் சென்ற குழந்தைவேலு, ஆச்சிமுத்து ஆகியோரின் புதல்வரும் செல்வராணியின் அன்புக்கணவரும், ஜவிதா, இராதா, சுதாம்பிகை, திருத்திலக, சத்தியகுகன், சாயிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னப்பிள்ளை, இராசரத்தினம், மனோன்மணியின் தம்பியாரும், வயிரகப்பிள்ளை, முத்துவேலு, தம்பிராசா J. P. மரணவிசாரணை அதிகாரி, கனகசபாபதி ஆகியோரின் மைத்துனருமாவார். குகபாலன், மகாதேவன், கலாயினி, பரந்தாமன் ஆகியோரின் சிறியதந்தையும் புஸ்பவல்லியின் மாமனுருமாவார். இவர் 1- 8- 83-ல் கொழும்பில் காலமானார். இவ்வறிவித்தலை உறவினரும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். 8112

## மரண அறிவித்தல்

### சிவலிங்கம்

கந்தர்மடத்தைச்சேர்ந்த சிவலிங்கம் குவான்ரிற்றி சேவயர் டுபாய் 24-7-83ல் அகால மரணமானார். இவர் ஜெயரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், பிரணவனின் அன்புத்தந்தையும், கோப்பாய் காலஞ்சென்ற நாகலிங்கம், முத்துப்பிள்ளை தம்பதிகளின்புதல்வரும், Dr. செல்வராஜா செட்டிக்குளம், தனலக்சுமியின் அன்பு மருமகனும், சிவஞானப்பிரகாசம், சிவானந்தராஜா, சிவபாத சுந்தரம், சிவநாதன், சிவராஜா, சிவநேசன், Dr. சிவரட்ணம், சிவபாலன், பரமேஸ்வரி ஆகியோரின்அருமை சகோதரரும், பிறைசூடி Dr. யோகநாதன், Dr. யோகரஞ்சிதம், ஈஸ்வரநாதன், லீலாவதி, சீதா, செல்வமணி, தெய்வீகராணி, ராசமலர், செல்வராணி, இந்திரா, ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் Dr. நவரட்ணம், மஞ்சுளா ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-7-83ம் திகதி காலை கந்தர்மடத்தில் நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்: Dr. செல்வராசா

16, பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். 8116

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி நடராசா

கொக்குவில் கிழக்கு, மணியகாரன் ஒழுங்கையைச் சார்ந்த திருமதி புவனேஸ்வரி நடராசா, 1983-07-29ம் திகதி வெள்ளிக்கிழமை காலைசிவபதமடைந்தார். ஈமக் கிரியைகள் அவரது இல்லத்தில் அன்று நடைபெற்றது.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் நடராசாவின் கைம்பெண்ணும் திருமதி அருந்ததி செல்வராசா, சிவசுப்பிரமணியம் (வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பிராந்திய கணக்காளர்), சிவராசா (நைஜீரியா) ஆகியோரின் அன்புத் தாயாரும். செல்வராசா, சுசீலாதேவி, சத்தியவதி (மல்லாகம் இந்துக் கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

இம்மரணச் சடங்குக்கு வருகைதந்த உற்றார், உறவினர், நண்பர்கள், சக உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும், உதவிபுரிந்த அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன், தவிர்க்க முடியாத காரணத்தினால் இவ் அறிவித்தலை எமது அனேக உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறிவிக்க முடியாமைக்கும் வருந்துகிறோம்.

ந. சிவசுப்பிரமணியம்,
"முருகன் விலா",
சுதுமலை தெற்கு,
சுதுமலை.

திருமதி அருந்ததி செல்வராசா,
மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

8118